بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

In the Name of Allāh, the Most Gracious, the Most Merciful

# ஜும்ஆ உரை

## ஸலாத்(தொழுகையில்) - தவிர்க்கப்பட வேண்டிய தவறுகள் (பாகம் 2)

**கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்கள் நிகழ்த்தியஜும்ஆ உரை**



Tamil Translation of Friday Sermon by Khalifatullah Hazrat Munir Ahmad Azim dated on:

03 ரபிய்யுல் அவ்வல் 1443

(30 செப்டம்பர் 2022)

இந்த நூற்றாண்டின்
முஜத்தித் மற்றும் மஸீஹ்


**Jamaat Ul Sahih Al Islam**

Dhawa Department, Tamilnadu.

GOVT.REG NO 11/2018

Cell Number : 9486157897

E.Mail : Jusai.tn@gmail.com

# ஸலாத்(தொழுகையில்) - தவிர்க்கப்பட வேண்டிய தவறுகள் (பாகம் 2)

........................................................................................

ஹஸ்ரத் கலிஃபதுல்லாஹ் முனீர் அஹ்மத் ஆஸிம்(அலை) அவர்கள் செப்டம்பர் 30, 2022 ஸலாத்(தொழுகையில்) - தவிர்க்கப்பட வேண்டிய தவறுகள் (பாகம் 2)
என்ற தலைப்பில் ஆற்றிய ஜும்ஆ உரை!

........................................................................................



# ஸலாத்(தொழுகையில்) - தவிர்க்கப்பட வேண்டிய தவறுகள் (பாகம் 2)

---

**பிஸ்மில்லா ஹிர் ரஹ்மான் நிர்ரஹீம்**

உலகெங்கிலும் உள்ள தனது அனைத்து ஸஹாபாக்கள் (மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும்) ஸலாத்தினை - அமைதிக்கான வாழ்த்தினைத் தெரிவித்த பிறகு ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் (அய்தஹு) அவர்கள் தஷஹுது, தவூத் மற்றும் சூரா அல் ஃபாத்திஹாவை ஓதினார்கள். பிறகு அவர்கள் தனது உரையின் பக்கம் கவனம் செலுத்தினார்கள்:

ஸலாத்(தொழுகை) - தவிர்க்கப்பட வேண்டிய தவறுகள் (பாகம் 2) என்ற தலைப்பில் தமது ஜும்ஆப் பேருரையை நிகழ்த்தினார்கள்.

அல்ஹம்துலில்லாஹ், ஸும்ம அல்ஹம்துலில்லாஹ், நமது தொழுகையை சரியான முறையில் நிறைவேற்றுவது மற்றும் தொழுகையை முறிக்கக் கூடிய தவறுகள் அனைத்தையும் தவிர்ப்பது குறித்த எனது உரையின் இரண்டாம் பகுதியை இன்று தொடர்கிறேன்.

## 8) ஜமாஅத் தொழுகையில் முதல் வரிசையில் நிற்ப்பதற்க்குத் தயக்கம் காட்டுவது.

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) கூறினார்கள் : பாங்கு சொல்வதற்குரிய நன்மையையும், (தொழுகையில்) முதல் வரிசையில் நிற்பதன் நன்மையையும் மக்கள் அறிவார்களானால் அதற்காக அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள். யாருக்கு அந்த இடம் கொடுப்பது என்பதில் சீட்டுக் குலுக்கி எடுக்கப்படும் நிலையேற்பட்டாலும் அதற்கும் தயாராகி விடுவார்கள். (புஹாரி, முஸ்லிம், திர்மிதி)

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் மேலும் கூறினார்கள்: “எவரேனும் கடமையாக்கப்பட்ட தொழுகையை ஜமாஅத்தாக (மஸ்ஜிதில்) நிறை வேற்று வதற்க்காகத் தனது வீட்டைவிட்டு வெளியேச் சென்றால், அது இஹ்ராம்

(அதாவது ஹஜ் யாத்ரீகர்கள் உடுத்திக் கொள்ளும் ஆடையின் இரண்டு துணிகளை) அணிந்து கொண்டு ஹஜ்ஜுக்குச் செல்பவருக்குப் கிடைக்கும் நன்மையைப் போன்றதாகும்." (அபு தாவூத்)

## 9) தொழுகையின் போது மேல்நோக்கிப் பார்ப்பது அல்லது இமாமின் வலது அல்லது இடப்புறம் பார்ப்பது.

முஸ்லீம்கள் அனைவரும் தங்கள் பார்வையைத் தாழ்த்தி, ஸஜ்தாவின் போது தலையை வைக்கும் இடத்தில் இருக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எச்சரித்தார்கள்: "தொழுகையின் போது தங்கள் பார்வையை உயர்த்துபவர்கள் அவ்வாறு செய்வதை நிறுத்தட்டும், இல்லையெனில் அவர்களின் பார்வை அவர்களை நோக்கி திரும்பாது. [அதாவது, அவர்கள் பார்வையை இழக்க நேரிடும்]." (முஸ்லிம்)

## 10) ஜமாஅத் தொழுகையின் போது ஸஃப்புகளில்(வரிசைகளில்) இடைவெளி விடுதல்.

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்: உங்கள் ஸஃப்புகளை (வரிசைகளை) நேராக்குங்கள். தோளோடுத் தோள் நின்று உங்கள் சகோதரர்களின் கரங்களுடன் மென்மையைக் கடைபிடியுங்கள். [அதாவது தொழுகையில் கை அல்லது முழங்கையால் அடுத்துள்ளவர் களைத் தள்ளுதல் குறித்து எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது], மேலும் ஹதஃப்- சிறிய ஆட்டுக்குட்டிகள் (சிறிய) இடைவெளிகள் வழியாக நுழைவதுப் போன்று, ஷைத்தான் நுழைந்து விடுவான் என்பதால் (தொழுதுக் கொண்டிருக்கும் மக்களுக்கிடையிலான) இடைவெளிகளை பூர்த்தி செய்யுங்கள்." (நூல்: அஹ்மத்)

## 11) (சூரா அல்-ஃபாத்திஹாவை ஒவ்வொரு வசனத்திற்குப் பிறகும் நிறுத்தாமல் ஓதுதல்.

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்: உங்கள் ஸஃப்பு களை (வரிசைகளை) நேராக்குங்கள். தோளோடுத் தோள் நின்று உங்கள் சகோதரர்களின் கரங்களுடன் மென்மையைக் கடைபிடியுங்கள். (அதாவது தொழுகையில் கை அல்லது முழங்கையால் அடுத்துள்ளவர் களைத் தள்ளுதல் குறித்து எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது), மேலும் ஹதஃப்- சிறிய ஆட்டுக்குட்டிகள் (சிறிய) இடைவெளிகள் வழியாக நுழைவது போன்று, ஷைத்தான் நுழைந்து விடுவான் என்பதால் (தொழுது கொண்டு

கொண்டிருக்கும் மக்களுக்கிடையிலான) இடைவெளிகளை பூர்த்தி செய்யுங்கள்." (நூல்: அஹ்மத்)

### 11) சூரா அல்-ஃபாத்திஹாவை ஒவ்வொரு வசனத்திற்குப் பிறகும் நிறுத்தாமல் ஓதுதல்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சூரா அல்-ஃபாத்திஹாவின் ஒவ்வொரு வசனத்திற்குப் பிறகும் இடைவெளி விட்டு ஓதுவார்கள். நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு ஓதுவார்கள் என்று உம்மு ஸலாமாஹ்(ரலி) அவர்கள் அறிவிக் கிறார்கள்:

“அகில உலகங்களையும் படைத்து ஆதரித்து பருபக்குவப்படுத்துபவனு மாகிய அல்லாஹ்வின் பெயரால்; அவன் அளவற்ற அருளாளன், மேன் மேலும் கருணை காட்டுபவன்; அவன் தீர்ப்பு நாளின் எஜமானன்,” [அதாவது, திருக் குர்ஆனின் ஆரம்ப அத்தியாயம்,சூரா அல்-ஃபாத்திஹா] அதனை ஓதும் போது வசனங்களாக பிரித்து ஓதுவார்கள் [மேலும் மற்றொரு அறிவிப்பில், ஒவ்வொரு வசனத்திற்கு இடையிலும் நிறுத்தி], ஒன்றன் பின் ஒன்றாக ஓதுவார்கள் என்று வந்துள்ளது. [அஹ்மத்,அபூ தாவூத்]

### 12) தொழுகையின் போது அசைந்து கொண்டிருத்தல், அல்லது கைக்கடிகாரம் பார்த்தல், அல்லது விரல்களை முறித்தல், ஆடைகளை அல்லது பாதத்தை அல்லது உடலின் மற்ற உறுப்புகளைத் தொடர்ந்து அசைத்துக் கொண்டிருத்தல்: –

**மேற்கூறியவைகள் அனைத்தும் தொழுகைக்குரிய நற்கூலியை குறைத்து விடும். அடிபணிதல் என்பது தொழுகை ஏற்றுக் கொள்ளப்படுவதற்குரிய முக்கியமான ஒரு நிபந்தனையாகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: –**

أَمَّنْ هُوَ قَانِتٌ آنَاءَ اللَّيْلِ سَاجِدًا وَقَائِمًا يَحْذَرُ الْآخِرَةَ وَيَرْجُو رَحْمَةَ رَبِّهِ ۗ قُلْ
هَلْ يَسْتَوِي الَّذِينَ يَعْلَمُونَ وَالَّذِينَ لَا يَعْلَمُونَ ۗ إِنَّمَا يَتَذَكَّرُ أُولُو الْأَلْبَابِ ﴿ ﴾

மறுமைக்கு அஞ்சுவோரும் தம் இறைவனின் அருளை எதிர்ப்பார்ப் வரும்,இரவு நேர (வணக்க)ங்களில் சிரம் பணிந்தும், நின்றும் பணிவுடன் (அவனை) வேண்டுபவரும் ஆகிய ஒருவர் (கட்டுப்பட்டு நடக்காதவனைப் போன்றவராக இருக்க முடியுமா?) அறிபவர்களும் அறியாதவர்களும் ஒப்பாவாரா? என்று நீர் கூறுவீராக. அறிவுடையவர்கள் மட்டுமே அறிவுரை பெறுவர்.(அஸ் ஸுமர் 39:10)

அல்லாஹ்வின் கட்டளை உணர்த்துவது: மேலும் (தொழுகையில்) அல்லாஹ்வுக்கு அடிபணிந்து நில்லுங்கள். இந்த அடிபணிதலானது தொழுகையின் அனைத்து நிலைகளிலும் குஷூவை (அதாவது வெளிப்புற மற்றும் உள்புற பணிவை) கடைப்பிடித்தலுக்கு பொருந்தக் கூடியதாகும்.

ஆகவே, தொழுகையில் கவனம் செலுத்துதல் (மிகவும்) அவசியமானதாகும். தொழுகை என்பது இறைவனுக்கும் அவனது அடியானுக்கும் இடையே யான ஒரு அதிமுக்கியமான சந்திப்பாகும். ஒருவர் அதில்(கிடைக்கப்பெறும்) இறை இன்பத்தையும் வெகுமதியையும் தன்னிடமிருந்து ஷைத்தான் பறித்துச் செல்லும்படி விட்டு விடக்கூடாது.

## 13) இமாமின் ஓதுதலை சரிபார்க்க ஜமாஅத் தொழுகையில் தொழுபவர் குர்ஆனைப் பிடித்து அதிலிருந்து ஓதுவது.

இச்செயல் அவ்வாறு செய்பவரின் கவனத்தை சிதறடித்து, தொழுகையில் கவனம் செலுத்துவதைத் தடுக்கிறது . தொழுகையில் இது ஓர் இழிவான செயலாகும்.

இமாம் தொழுகையின் போது தவறு செய்தாரா? இல்லையா? என்பதனை அல்லாஹ் அறிவான். அவரை தண்டிப்பதா? அல்லது மன்னிப்பதா? என்பது அல்லாஹ்வின் உரிமையாகும். தொழுகையின் போது ஒரு பிரார்த்தனை புத்தகத்தையோ அல்லது திருக்குர்ஆனையோ கொண்டு இமாமை குறுக்கு சோதனைச் செய்வது நம்பிக்கையாளரின் கடமை அல்ல, அதல்லாமல், ஓர் நம்பிக்கையாளர் மனப்பாடமாக அறிந்திருந்தால், இமாம் தவறு செய்யும் போதெல்லாம், அவர் சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூய்மையானவன்) என்று கூறி அவரேத் திருத்துகிறார். இதனால் இமாமின் கவனத்தை அவரது தவறின் பக்கம் கவனம் செலுத்தி, தன்னைத் திருத்திக்கொள்ளும் வாய்ப்பினை அவருக்கு வழங்குகிறது.

ஆனால் தொழுகையைத் தனியாகத் தொழக்கூடியவர், தொழுகையின் போது ஒத வேண்டிய ஒரு குறிப்பிட்ட பிரார்த்தனை பற்றி நன்றாகத் தெரியாதபோது உதாரணமாக, இஸ்லாம் மற்றும் தொழுகையைப் பற்றிக் கற்றுக் கொள்கின்ற மற்றும் தொழுகையை கடைபிடிக்கின்ற புதிதாக மதம் மாறிய முஸ்லிம் அல்லது (கற்றுக் கொண்டிராத) தீனை கடைப்பிடிக்காத ஒரு முஸ்லிம், பின்னர் இஸ்லாத்தில் தனது கடமைகளை நிறைவேற்று வதிலும், அல்லாஹ்வின் உரிமைகளை நிறைவேற்றுவதிலும் கவனம் செலுத்துவதன் மூலம் தனது வாழ்க்கையை சிறப்பாக மாற்றிக் கொள்ள முடிவு செய்கிறார் என்றால் (அதன் நிமித்தம் அவ்வாறு. பார்த்து ஓதிக்

கொள்ளலாம்). இன்னொரு வழியில், ஒரு நம்பிக்கையாளர் துஆக்கள் மற்றும் பிரார்த்தனைகளின் அனைத்துத் தேவைகளையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் புத்தகங்களின் உதவியின்றி தொழுகையின் போது அவற்றை ஒத வேண்டும் என்றும் ஆழமாக அறிவுறுத்தப்படுகிறது / பரிந்துரைக்கப்படுகிறது.

## 14) இமாமுடன் போட்டி போடுவதும் அல்லது அவருடன் நகர்வதும் அல்லது ஜமாஅத் தொழுகையில் அவரை முந்திக் கொள்வதும்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் இமாமை முந்தாதீர்கள். அவர் "அல்லாஹு அக்பர்" என்று கூறினால் 'நீங்களும் "அல்லாஹு அக்பர்" என்று கூறுங்கள். அவர், 'வலள்ளால்லீன்' என்று கூறினால் நீங்கள் ஆமீன் என்று கூறுங்கள்". (இப்னு மஜா).

மற்றொரு அறிவிப்பில், அவர்கள் கூறினார்கள்: "நிச்சயமாக இமாம் பின் பற்றப்படுவதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளார்" (இப்னுமாஜா, முஸ்லிம்)

ஒரு இமாமின் பின்னால் தொழும் நபர், இமாம் அடுத்த நிலையை அடையும் வரை தொழுகையின் அடுத்த நிலைக்கு முந்தக்கூடாது. இமாம் தனது நெற்றியை தரையில் வைக்கும் வரை அவர் ஸஜ்தாச் செய்யத் தொடங்கக் கூடாது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"உங்களில் ஒருவர் (தொழுகையில்) இமாமை முந்திக்கொண்டு தமது தலையை உயர்த்துவதால் அவரது தலையைக் கழுதையின் தலையாக அல்லாஹ் ஆக்கி விடுவதை அஞ்சிக் கொள்ள வேண்டாமா?" (புஹாரி, முஸ்லிம், திர்மிதி, இப்னு மாஜா, அன் நஸாயி)

## 15. ருகூவுவின் போது தலையை அதிகமாக தாழ்த்துவது அல்லது மேல்நோக்கி உயர்த்துதல் மற்றும் முதுகை வளைப்பது:

ருகூவுவின் போது தலையை சாதாரண நிலையில் வைத்திருக்க வேண்டும், அதே நேரத்தில் முதுகுப்புறம் (வளையாமல்) நேராக இருக்க வேண்டும் மேலும் அது உங்கள் காலுடன் (வளை வில்லாமல்)செங்கோணத்தை (right angle) உருவாக்கவேண்டும்.

## 16. ருகூஃ அல்லது ஸுஜூதில் உடலின் பக்கவாட்டில் கைகளை ஒட்டியவாறு மேற்கொள்வதும் ஸுஜூதின் போது வயிற்றை

## தொடையுடன் ஒட்டியவாறு செய்வதும்:

ஸுஜூதை முறையாகச் செய்யுங்கள்! உங்கள் முழங்கைகளை நாய் விரிப்பது போல் தரையில் விரித்துக் கொள்ள வேண்டாம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (அனஸ்(ரழி), அபூதாவூத்)

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் ருகூஃ மற்றும் ஸுஜூதின் போது தம்மிரு அக்குள்களின் வெண்மை தென்படும் அளவுக்கு இரு கைகளையும் விரித்துவைப்பார்கள்.

## 17. முதுகின் ஒரு பகுதி வெளிப்படுமாறு தொழுவது

இது எவ்வாறு நிகழ்கிறது என்றால் தொழும் பொது இறுக்கமான ஆடை அதாவது இறுக்கமான கால் சட்டை(பேண்ட்) மற்றும் குட்டையான சட்டை அணியும்போது ஸுஜூது செய்யும்போது ஒரு பகுதி உடல் தெரிய ஆரம்பிக்கிறது குறிப்பாக அந்த உடல் பகுதிகள் அவ்ரஃ - அதாவது அவசியம் மறைக்க வேண்டியப் பகுதி என்று அழைக்கப்படுகிறது. மேலும், மறைக்கப் படவேண்டிய பகுதியை மறைக்காமல் தொழுவது, (அவ்வாறான தொழுகை) செல்லுபடியாகததாக ஆகிவிடுகிறது.

## 18. தஃமீனை புறக்கணித்தல் அதாவது தொழுகையில் சத்தமாக ஆமீன் கூறுவது அதாவது "இமாம் 'கைருல் மக்லூபி அலைஹிம் வலழ்ழாலீன்' என்று சூரத்துல் ஃபாத்திஹா ஒதி முடித்ததும் இமாமுக்குப் பின் நின்று தொழுபவர் ஆமீன் கூறுவது.

நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் :- "இமாம் 'கைரில் மக்லூபி அலைஹிம் வலழ்ழாள்ளீன்' (அதாவது உனது கோபத்திற்கு ஆளானவர் வழியும் அல்ல, நெறி தவறியவர் வழியும் அல்ல) என்று கூறும் போது நீங்கள் ஆமீன் கூறுங்கள்! ஏனெனில் எவர் கூறும் ஆமீன், மலக்குகள் கூறும் ஆமீனுடன் ஒத்து அமைந்து விடுகிறதோ அவரது முன் பாவங்கள் மன்னிக்கப்படு கின்றன". நூல்: புகாரீ

## 19) சுஜூதின் போது தலையின் நுனி பகுதியை மட்டும் தரையில் படச்செய்தல்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நான் ஸஜ்தா செய்யும் பொது எனது ஏழு எலும்புகளும் (அதாவது நெற்றி, மூக்கு, கைகள், முழங்கால்கள் மற்றும் பாதங்கள்) தரையில் படவேண்டும் என்று எனக்கு கட்டளையிடப் பட்டுள்ளது". (புகாரி, முஸ்லிம், இப்னுமாஜா, திர்மிதி, அந்நஸயீ, அபூதாவூத்)

கூறப்பட்டுள்ள கட்டளையைப் பின்பற்று வதன் பொருட்டு, [சுஜூத்] ஸஜ்தாவின் போது நெற்றியையும் மூக்கையும் தரையில் ஊன்றிட வேண்டும் என்பது அவசியமாகிறது.

## 19) சுஜூதின் போது தலையின் நுனி பகுதியை மட்டும் தரையில் படச்செய்தல்.

ஹஸ்ரத் ஸைத் பின் வஹ்ப்(ரலி) அவர்கள் கூறியதாவது: ஹஸ்ரத் ஹுதைஃபா(ரலி) அவர்கள் 'ருகூவு மற்றும் ஸஜ்தாவைச் சரியாகச் செய்யாத ஒருவரைக் கண்டார்கள்'. அவர்கள் அவரிடம், "நீங்கள் தொழுகையினை நிறைவேற்றவில்லை மற்றும் நீங்கள் மரணித்தால் முஹம்மது(ஸல்) அவர்களின் மார்க்கமல்லாத அதாவது (இஸ்லாம் அல்லாத) வேறு மார்க்கத்தில் தான் மரணிப்பீர்கள்" என்று கூறினார்கள். (புஹாரி)

ஹஸ்ரத் அபு ஹுரைரா(ரலி) அவர்கள் கூறியதாவது: “எனது நேசத்திற்குரிய நண்பர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள், சேவல் கொத்துவதை போல (அதாவது தொழுகையை வேகமாக) நிறைவேற்றுவது, நரியைப் போல கண்களை (அங்கும் இங்கும்) நகர்த்துவது மற்றும் குரங்குகளைப் போல (அதாவது தொடைகளில்) உட்கார்ந்திருப்பது போன்ற தொழுகை தோரணை களை மேற்கொள்வதை விட்டும் என்னைத் தடை செய்தார்கள்.” (அஹ்மத்)

மற்றொரு ஹதீஸில், ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: (அத்தகையாத்தின் போது)வலது பாதத்தை நேராக்கி, விரலை கிப்லாவை நோக்கி வைத்து, இடது காலின் மீது உட்காருதல் வேண்டும், இம்முறை சுன்னத்தில் இடம்பெற்றுள்ளது. (அன்- நஸாயி)

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் : "தனது தொழுகையைத் திருடு கிறவனே மிக மோசமான திருடனாவான்" என்று கூறினார்கள். இதற்க்கு மக்கள், “அல்லாஹ்வின் தூதரே! (தனது) சொந்தத் தொழுகையினை (ஒருவர்) எவ்வாறுத் திருட முடியும்?" என்று கேட்டார்கள். அதற்கு முஹம்மது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அதன் (தொழுகையின்) போது ருகூஃ வையும் சுஜூதையும் பூர்த்தி செய்யாமல் இருப்பதன் மூலம் (அவர் அத்தொழுகையினை திருடுகிறார்)." (அஹ்மத்)

ருகூஃவின் போது (சப்தமில்லாமல்) மெதுவாக மூன்று முறை ‘சுப்ஹான ரப்பியல் அழீம்’ என்று மூன்று முறையும், ஸஜ்தாவின் பொது ‘சுப்ஹான ரப்பியல் அஃலா’ என்று மூன்று முறையும் போதுமான அளவிலான நீண்ட நேரம் எடுத்து ஓதி அந்த ரக்ஆத்தை முடிக்க வேண்டும். இதனைப் பற்றி முஹம்மத் நபி(ஸல்) அவர்களும் அறிவுறுத்தியுளார்கள் :

"எவர் ருகூவையும் ஸுஜூதையும் பூர்த்தி செய்யவில்லையோ அவருடைய தொழுகை பயனற்றதாக மாறிவிடுகிறது".

இந்த விசயம் மிகவும் முக்கியமானதாக இருப்பதாலும், தொழுகையில் பல நிலைகள் இருப்பதாலும், அறியாமை அல்லது தவறான விளக்கங்களினால் அதில் பிழைகள் ஏற்படக்கூடியதாக இருப்பதாலும், இன்ஷா அல்லாஹ், அடுத்த வாரமும் இதே தலைப்பில் எனது இந்த ஜும்மா உரையைத் தொடர்கிறேன், இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் எனக்கு அதற்கான ஆற்றலை வழங்குவானாக!, மேலும் இம்மையிலும் மறுமையிலும் அவனது இன்பத்தினை அறுவடை செய்யும் வகையில் நமது ஸலாத்தினை [தொழுகைகளை] முழுமையாக நிறைவேற்றிடும் அருளை நம் அனைவருக்கும் தந்தருள்வானாக!. இன்ஷா அல்லாஹ், ஆமீன்.

# கலீபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள்!

இமாம் தொழுகையின் போது தவறு செய்தாரா? இல்லையா? என்பதனை அல்லாஹ் அறிவான். அவரை தண்டிப்பதா? அல்லது மன்னிப்பதா? என்பது அல்லாஹ்வின் உரிமையாகும். தொழுகையின் போது ஒரு பிரார்த்தனை புத்தகத்தையோ அல்லது திருக்குர்ஆனையோ கொண்டு இமாமை குறுக்கு சோதனைச் செய்வது நம்பிக்கையாளரின் கடமை அல்ல, அதல்லாமல், ஓர் நம்பிக்கையாளர் மனப்பாடமாக அறிந்திருந்தால், இமாம் தவறு செய்யும் போதெல்லாம், அவர் சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூய்மையானவன்) என்று கூறி அவரேத் திருத்துகிறார். இதனால் இமாமின் கவனத்தை அவரது தவறின் பக்கம் கவனம் செலுத்தி, தன்னைத் திருத்திக்கொள்ளும் வாய்ப்பினை அவருக்கு வழங்குகிறது.